**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.68/2024 - PW-5**

| | |
|---|---|
| Name | திரு. விநாயகம் |
| Husband/Father Name | இராமன் |
| Village /Area | மகேந்திரவாடி |
| Taluk | நெமிலி |
| Occupation | ஓட்டுநர் |
| Age | 30 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 05.11.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த சக்திவேல் எனது சித்தப்பா மகன். அசா.1 செந்தில் குமார் எனது மாமா ஆவார். கடந்த 16.12.2021 அன்று இரவு 10.00 மணிக்கு மேல் சக்திவேல் என்பவர் JCB–ஐ எடுத்துக் கொண்டு சிறுவளையம் கிராமத்திற்கு சென்ற போது என் தம்பி சக்திவேலுக்கும் அதே கிராமத்தை சேர்ந்த அருள் என்பவருக்கும் முன்விரோதம் இருந்த காரணத்தினால் சக்திவேல் என்பவர் JCB வண்டியின் மூலம் அருளின் வீட்டு காம்பவுண்ட் சுவரை இடித்ததாகவும் அப்போது அருள் வெளியே வந்து பார்த்து சக்திவேலை திட்டி உன்னை வெட்டி விடுவேன் என்று கூறி கத்தியை எடுத்து பின்னாலேயே JCB–ஐ ஓட்டி சென்ற சக்திவேலை துரத்தி சென்ற போது சிறுவளையம் கிராமத்தில் கேசவன் வீட்டில் JCB மோதி நின்ற போது அருள் என்பவர் வண்டியில் இருந்த சக்திவேலை இடது பக்க தலையின் மீது வெட்டினார்.

அப்போது சக்திவேல் தடுத்த போது அவரது விரல்கள் துண்டானது. அருள் உடன் இந்த தினேஷ், நந்தக்குமார், கலையரசு ஆகியோர்கள் கல்லாலும், கட்டையாலும் தலை மற்றும் கையின் மீது சக்திவேலை அடித்தார்கள். காயம் பட்ட சக்திவேலை என்னுடைய மாமா செந்தில்குமார் மீட்டு வாலாஜா அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு சிகிச்சை பலனின்றி மறுநாள் அவர் இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் பணிபுரியும் தனியார் நிறுவனத்தின் பெயர் P.R.M டிரான்ஸ்போர்ட், மாம்பாக்கம் ஆகும். மகேந்திரவாடிக்கும் மாம்பாக்கத்திற்கும் இடைப்பட்ட தூரம் 100 கிலோ மீட்டர். நான் வேலைக்கு சென்றால் இரண்டு, மூன்று நாட்கள் தங்கிவிட்டு வருவேன் என்று சொன்னால் சரிதான். அருள் கத்தி வைத்திருந்த விவரத்தை போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன். நான் கூறுவது தவறு என்றும் அதை போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

இறந்த சக்திவேலை நான் உயிருடன் இருக்கும் போது மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அப்போது போலீஸில் ஏன் புகார் அளிக்கவில்லை என்று சொன்னால் மருத்துவமனையில் அனுமதித்த பிறகு புகார் கொடுக்கலாம் என்று நினைத்தேன். சக்திவேலுக்கு ஒரு கால் இல்லை மற்றொரு காலில் பாதம் இல்லை

என்று சொன்னால் சரிதான்.

சக்திவேலை யாராவது தூக்கி உட்கார வைத்தால் தான் வண்டியை ஓட்ட முடியும் என்று சொன்னால் சரிதான். சக்திவேல் சம்பவ தினத்தன்று இரவு 09.30 மணிக்கு JCB வண்டி ஓட்டியதை பார்த்தேன். சக்திவேலை அந்த வண்டியில் உட்கார வைத்தது அவரது நண்பரான பூவரசன் ஆவார்.

அதற்கு பிறகு சக்திவேல் தனியாக JCB வண்டியை ஓட்டி சென்றார். தனியாக சக்திவேலால் JCB வண்டியை இயக்க முடியுமா என்றால் முடியும் காரணம் கிலட்ச்சை கையிலேயே இயக்கலாம். நான் வேலைக்கு சென்றால் வருகை பதிவேட்டில் கையொப்பம் இடுவது வழக்கம். 16.12.2021 மற்றும் 17.12.2021 ஆகிய தேதிகளுக்கான வருகை பதிவேட்டை நான் பணிபுரிந்த நிறுவனத்திலிருந்து வரவழைத்தால் நான் வேலைக்கு சென்ற விவரம் தெரிய வரும் என்று சொன்னால் சரிதான்.

நான் கூறுவது போல் சம்பவ சமயத்தில் நான் இல்லை என்றும் எனக்கு சம்பவம் குறித்து செந்தில் கூறி தான் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். எனக்கு நேராடியாக எதுவும் தெரியாது என்றும் செந்தில் கூறிதான் தெரிய வந்தது என்று சொன்னால் சரிதான்.

JCB வண்டியில் கிளட்ச்சை கையால் இயக்கலாம் என்று நான் கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. இறந்து போன நபர் எனது சித்தப்பா மகன் என்பதால் அவருக்கு ஆதவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

JCB வண்டியில் பிரேக்கும், ஆக்சலரேட்டரும் காலால் தான் மிதித்து இயக்க முடியும் என்று சொன்னால் சரிதான். ஆகையால்

இறந்த சக்திவேலுக்கு காலே இல்லை என்பதால் பிரேக்கையோ, ஆக்சலரேட்டரையோ, கிளட்ச்சையோ இயக்கி அவரால் JCB வண்டியை இயக்கி இருக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. ஒரு கால் இல்லை என்றாலும் ஓட்டலாம்.

சக்திவேலுக்கு ஒரு கால் இல்லாததால் வீட்டில் தான் இருப்பார் என்றும் அவரது காலை கடனை கழிப்பதற்கு யாரவாது அவரை அழைத்து செல்ல வேண்டும் என்று சொன்னால் சரிதான். பூவரசன் மற்றும் சக்திவேலுக்கு குடிப்பழக்கம் மற்றும் கஞ்சா பழக்கம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. பூவரசன் மற்றும் சக்திவேலும் கஞ்சா மற்றும் குடித்து விட்டு தான் கேசவனின் வீட்டை சென்று இடித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.

கேசவனின் வீட்டை இடித்த காரணத்தினால் தான் சிறுவளையம் கிராமத்தை சேர்ந்த ஊர் பொதுமக்களை சக்திவேலை தாக்கி இறந்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.05 18:14:04 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.